உ

சிவமயம்.

குள்ளத்தாராசிந்து.

சென்னை சூளை

நிரஞ்சனவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1923

கடவுள் துணை.

குள்ளத்தாரா சிந்து,

விநாயகர் வணக்கம்.

விருத்தம்.

சிந்துசூழுலகிலுள்ளோர் திரௌபலங்கொள்ளவேண்டி, விந்தைசேர்மனதுக்கோதும் வியன்மதி மாலைதன்னை, கந்தமார்சிந்தாய்கூறக் கரிமுக னுபயபொற்பூங் கொந்தலர்க்கழலைநாளுங் கூப்பியேபணிகுவாமால்.

நான்முகம்,

சிந்து கண்ணிகள்,

சித்திவிநாயகனை ஏ குள்ளத்தாரா நீ
சிந்தைதனிலேவகிப்பாய் ஏ குள்ளத்தாரா
ஏகுஸிக்கி தில்லாலே நீ முன்னாலே நான்பின்னாலே
சிந்தைதனிலேவகிப்பாய் ஏ குள்ளத்தாரா ௧

பாடலீசன் பொற்பதத்தை ஏ குள்ளத்தாராரீ
பக்தியுடன்போற்றிசெய்வாய் ஏ குள்ளத்தாரா ௨

பேர்பெரியநாயகியை ஏ குள்ளத்தாராரீ
வெற்றியுடன்போற்றிசெய்வாய் ஏ குள்ளத்தாரா ௩

வேலவனைப்போற்றிடுவாய் குள்ளத்தாராநின்
வினைகளகன்றிடுவாய் குள்ளத்தாரா ௪

வள்ளிதெய்வானைபதம் குள்ளத்தாராரீ
வண்மையுடன்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா ௫

ஆதிமூலப்பொருளை குள்ளத்தாராரீ
யன்புடனேபோற்றிசெய்வாய் குள்ளத்தாரா ௬

செந்திருவின்பொற்பதத்தைக் குள்ளத்தாராநின்
சிந்தையிலிருத்திடுவாய் குள்ளத்தாரா ௭

தாயார்சரஸ்வதியை குள்ளத்தாராரீ
சந்ததமும்போற்றிசெய்வாய் குள்ளத்தாரா ௮

ஆருயிர்க்குருதுணையாங் குள்ளத்தாரா என்
தன்பின்வழியேநடக்கிற் குள்ளத்தாரா ௯

சந்த்ரகாந்தமேடையுண்டு குள்ளத்தாரா வதைச்
சாரவும்பொன்வேணியுண்டு குள்ளத்தாரா ௰

பன்னிருகால்வாசியுண்டு குள்ளத்தாரா வத்தப்
பற்றப்பரிசுத்தனுண்டு குள்ளத்தாரா ௧௧

சோமவட்டமாம்பதியிற் குள்ளத்தாராநீ
சுகித்தமூர்தமுண்மருப்பாய் குள்ளத்தாரா ௧௨

ஏமனுமடறுவானோ குள்ளத்தாராநீ
என்வழிகடப்பையாகில் குள்ளத்தாரா ௧௩

இந்திரப்பட்டமும்பெறுவாய் குள்ளத்தாராசொல்
இருவினையகன்றிடுவாய் குள்ளத்தாரா ௧௪

கட்டிலுண்டுமெத்தையுண்டு குள்ளத்தாரா நாம்
கலந்துசுகிக்கலாமே குள்ளத்தாரா ௧௫

தலையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா ரத்ன
சடைபில்லைதானுமுண்டு குள்ளத்தாரா ௧௬

சடைநாகந்தானுமுண்டு குள்ளத்தாரா வதைச்
சார்ந்தகுச்சுகுப்பியுண்டு குள்ளத்தாரா ௧௭

காதிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா நல்ல
கம்மல்கிமிக்கியுண்டு குள்ளத்தாரா ௧௮

கொப்புமுருகுமுண்டு குள்ளத்தாரா நற்
கொந்தளப்பொன்னோலையுண்டு குள்ளத்தாரா ௧௯

கத்திரிப்பாவலுடனே குள்ளத்தாரா நல்ல
கனத்தசம்புலுமுண்டு குள்ளத்தாரா ௨௰

நத்துமூக்குத்தியுண்டு குள்ளத்தாராநீ
நாணயமாய்ப்பூட்டிக்கொள்ளக் குள்ளத்தாரா ௨௧

கழுத்திலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா உயர்
கண்டசரமாலையுண்டு குள்ளத்தாரா உஉ

கைக்குத்தங்கக்காப்புமுண்டு குள்ளத்தாரா
கனத்தகொலுசுமுண்டு குள்ளத்தாரா உ௩

இடையிலணிந்துகொள்ளக் குள்ளத்தாரா
இசைந் ஒட்டியாணமுண்டு குள்ளத்தாரா உ௪

பாதசரந்தண்டையுண்டு குள்ளத்தாராநீ
பண்புடனணிந்துகொள்ளக் குள்ளத்தாரா உரு

விரலிற்றரித்திடவுங் குள்ளத்தாரா வெகு
விந்தைமோதிரங்களுண்டு குள்ளத்தாரா உ௬

இழையாயிரம்பொன்பெற்ற குள்ளத்தாரா உனக்கு
சித்திரவண்ணச்சேலையுண்டு குள்ளத்தாரா உஎ

சரிகைரவிக்கையுண்டு குள்ளத்தாரா நிகழ்
தங்கவங்கிபில்லையுண்டு குள்ளத்தாரா உஅ

பத்துலட்சம்விலையுள்ள குள்ளத்தாரா உயர்
பங்களாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா உகூ

தங்கத்தாலேகிண்ணியுண்டு குள்ளத்தாராநீ
சாதமருந்திடவே குள்ளத்தாரா ௩௰

வெள்ளிப்பாத்திரங்களுண்டு குள்ளத்தாரா நீ
வேணதையநுபவிப்பாய் குள்ளத்தாரா ௩க

கைப்பிடிக்ககால்பிடிக்கக் குள்ளத்தாரா சொலுங்
கனத்ததோழிகளுநண்டு குள்ளத்தாரா ௩௨

ஏரிச்சவாரிசெய்யக் குள்ளத்தாரா உனக்
கிசைந்தபல்லாக்குமுண்டு குள்ளத்தாரா ௩௩

தந்தநாற்காலியுண்டு குள்ளத்தாரா நீ
சார்ந்துகொண்டிருப்பதற்கு குள்ளத்தாரா ௩௪

சோபாக்கள்தானுமுண்டு குள்ளத்தாரா என்
சுந்தரியேநீயிருக்கக் குள்ளத்தாரா ௩௫

பொன்னுஞ்சற்பலகையுண்டு குள்ளத்தாரா என்
பொற்கொடியேயாடுதற்கு குள்ளத்தாரா ௩௬

நன்னயமாய்பேசுதற்கு குள்ளத்தாரா நல்ல
நாத்திமாரனேகருண்டு குள்ளத்தாரா ௩௭

மாமியுண்டுமாமனுண்டு குள்ளத்தாரா
மைத்துனரனேகருண்டு குள்ளத்தாரா ௩௮

சந்துமுண்டுபொந்துமுண்டு குள்ளத்தாரா
ஜாடைசெய்துகூப்பிடவுங் குள்ளத்தாரா ௩௯

தென்னமரச்சோலையுண்டு குள்ளத்தாரா நீ
சிந்தைகளித்தாடவடி குள்ளத்தாரா ௪௰

பாக்குமரச்சாலையுண்டு குள்ளத்தாரா நீ
பந்துவிளையாடவாடி குள்ளத்தாரா ௪௧

கற்பகத்தருவுமுண்டு குள்ளத்தாரா நீ
கருதியதெல்லாந்தாக் குள்ளத்தாரா ௪௨

கெடிலந்தியுமுண்டு குள்ளத்தாரா வதின்
கிளர்காலுமுண்டு குள்ளத்தாரா ௪௩

உன்னைநம்பிநானிருந்தால் குள்ளத்தாரா இந்த
உலகம்பொருக்கலையே குள்ளத்தாரா ௪௪

அந்தமுள்ளமாதரசே குள்ளத்தாரா
யன்புடனருகில்வாராய் குள்ளத்தாரா ௪௫

கிளிநேர்மொழியினளே குள்ளத்தாரா நீ
கிருபைசெய்துவாருயோடி குள்ளத்தாரா ௪௬

மயில்போலுஞ்சாயலாளே குள்ளத்தாரா என்
மனதுமுருகாதோடி குள்ளத்தாரா ௪௭

அன்னநடைமாதேயடி குள்ளத்தாரா உன்
நகமுமிரங்காதோ குள்ளத்தாரா ௪௮

அடைக்காயும்வெற்றிலையுங் குள்ளத்தாரா வெனக்
கருந்தவரியாயோடி குள்ளத்தாரா ௪௯

வாசனைதிரவியங்கள் குள்ளத்தாரா நீ
வகைவகையாய்ப்பூசிக்கொள்வாய் குள்ளத்தாரா ௫௰

சண்பகமலர்நிதமும் குள்ளத்தாரா நீ
சம்பிரமாய்முடித்துக்கொள்வாய் குள்ளத்தாரா ௫௧

பாடலீசன்பொற்பதத்தைக் குள்ளத்தாராநீ
பத்தியுடன்சேவைசெய்வாய் குள்ளத்தாரா ௫௨

பாலும்நீறும்போலவடி குள்ளத்தாரா நாம்
பண்புடனேவாழ்ந்திருப்போம் குள்ளத்தாரா ௫௩

மங்களமாய்வாழ்ந்திருப்பாய் குள்ளத்தாரா இந்த
வையகமுள்ளவுமடி குள்ளத்தாரா ௫௪

குள்ளத்தாராசிந்து

முற்றிற்று.